சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை.
வழக்கு எண் :MCOP: 64/2019

2024ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 05ம் நாள் மனுதாரர் சாட்சியின் வாக்குமூலம் (1889ம் ஆண்டு சாட்சியச் சட்டம் எண். 44வது பிரிவு 5வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி. T.சண்முகபிரியா கிரேடு 2 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு சத்தியப் பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் ராமலிங்கம் (PW5) | தொழில் |
| தந்தை/கணவர் பெயர் | சமயம் |
| கிராமம் | சாதி |
| தாலுகா | வயது |

<u>முதல் விசாரணை</u>

05.04.2024

நான் இந்த மனுவின் மனுதாரர்கள் தரப்பில் 4வது சாட்சி ஆவேன். என்னுடைய சாட்சியத்தை பிரமாணவாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். இதைப்படித்து பார்த்து கையெழுத்து செய்துள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அசலுடன் ஒப்புகை செய்யப்பட்ட என்னுடைய ஆதார் அட்டை நகலை தாக்கல் செய்கிறேன் அது சா.சா.ஆ. 4 ஆகும்.

<u>4வது எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>

2) விபத்தில் இறந்து போன அருணாச்சலம் எனக்கு என்ன உறவுமுறை என்றால் என் மாமா மகனாகும். விபத்தை நான் நேரடியாக பார்த்தேன். விபத்தில்இறந்து போனவர் விபத்து சைக்கிளை உருட்டி சென்றார். நான் அவருடன் செல்லவில்லை. நான் ஒக்ஸ்சாப்பில் நின்று கொண்டிருந்தேன். முதல்தகவல்அறிக்கை யார் மீது பதிவு செய்யப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது. என்னை போலிசார் விசாரித்தாரர்களா என்றால்

நீதிமன்றத்தில் விசாரித்தார்கள். நீதிமன்றத்தில் நான் சாட்சி சொன்ன வழக்கில் தண்டனை கொடுக்கப்பட்டதா என்றால் தெரியாது.

3) அந்த வழக்கில் யார் குற்றவாளி என்று எனக்கு தெரியாது. குற்றவாளி யார் என்றே தெரியாமல் சாட்சியம் சொல்கிறேன் என்றால் என்ன நடந்ததோ அதை சொல்கிறேன். இந்த வழக்கில் 1வது எதிர்மனுதாரர் தான் விபத்திற்கு காரணம் என்று முதல்தகவல்அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும் 3வது எதிர்மனுதாருக்கு எதிராக குற்றவழக்கு பதிவு செய்யப்படாத நிலையில் அவருக்கு எதிராக பொய்சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல. விபத்தை நான் நேரடியாக பார்த்தேன். எவ்வளவு தூரத்திலிருநது பார்த்தேன் என்றால் 30அடி தூரத்தில் பார்த்தேன். நான் ஒக்ஸ்சாப்பில் வேலை பார்த்தேன். ஒக்ஸ்சாப்பில் வேலை பார்த்தற்கு ஆவணம் எதாவது தாக்கல்செய்ய முடியுமா என்றால் அது அந்த அளவிற்கு பெரிய ஒக்ஸ்சாப் இல்லை அதனால் தாக்கல்செய்யமுடியாது. நான் வேலை செய்யும் ஒக்ஸ்சாப்பின் பெயர் ராம்ஜி ஒக்ஸ்சாப். எத்தனை பேர் வேலை செய்கிறோம் என்றால் ஓனரையும் சேர்த்து 4பேர் வேலை செய்கிறோம். அடையாள அட்டை எதுவும் என்னிடம் இல்லை. ஒரு நாளைக்கு ரூ.450/- சம்பளமாகும். என் ஓனரை விசாரித்தால் நான் வேலை செய்வது தெரியும்என்றால் தெரியும். இறந்துபோனவர் என் உறவினர் என்பதால் நான் விபத்தை பார்க்காமல் பார்த்ததாக பொய்சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்லுவதுபோல் ஒக்ஸ்சாப்பில் வேலை செய்கிறேன் பொய் என்றால் சரியல்ல. என்னுடைய சாட்சியம் ஏற்புடையது அல்ல என்றால் சரியல்ல.

<u>2வது எதிர்மனுதாரர் தரப்பு குறுக்குவிசாரணை</u>

4) விபத்து நடந்த சாலை 4வழி சாலை என்றால் சரிதான். TN 67 AE 3808 என்ற இண்டிகா வாகனம் தார் சாலையின் இடது ஓரமாக நின்று கொண்டிருந்தது என்றால் சரிதான். விபத்து நடக்கும்போது சுமார் மாலை 4மணிக்கு மேல் இருக்கும். விபத்தில் இறந்த நபர் சைக்கிளை ஓட்டி வரவில்லை உருட்டி சென்றார். அவரும் தார் சாலையில் தான் உருட்டி

சென்றார். வெள்ளை கோட்டிற்கு இடதுபுறமாக சென்றார். தெற்கிலிருந்து வடக்குநோக்கி செல்லக்கூடிய வாகனம் நின்று கொண்டிருந்த நபர்களை பார்க்கமுடியாது என்றால் சரிதான். நின்று கொண்டிருந்த இண்டிகா வாகனத்தில் சிக்கனல் விளக்கு எதுவும் எறியவில்லை என்றால் சரிதான்.

5) அல்ட்டோ வாகனம் நின்றுகொண்டிருந்த இண்டிகா வாகனத்தில் மோதி இண்டிகா வாகனம் சைக்கிளை உருட்டி சென்ற அருணாச்சலம் மீது மோதியது என்றால் இல்லை. அல்ட்டோ வாகனம் நின்றுகொண்டிருந்த இண்டிகா வாகனத்தில் மோதி அதன் பின்னர் சைக்கிளை உருட்டி சென்றவர் மீது மோதியது. நின்றுகொண்டிருந்த இண்டிகா வாகனத்திற்கும் சைக்கிளை உருட்டி சென்றவருக்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் 10–15 அடி இருக்கும். இண்டிகா வாகனத்திலிருந்து 15 அடி தூரத்தில் தான் நடந்தவர் மீது மோதி விபத்து நடந்தது என்றால் சரிதான். இண்டிகா வாகனத்தை அதன் ஓட்டுநர் சரியாக சாலைவிதிகளை பின்பற்றியிருந்தால் இந்த விபத்து நடந்திருக்காது என்றால் சரிதான். விபத்திற்கு இண்டிகா வாகன ஓட்டுநரும் ஒரு காரணம் என்றால் சரிதான். இண்டிகா வாகனத்தை ஓட்டி சென்றவர் நான்குவழிசாலையில் சிக்கனல் போடமல் நிறுத்தியதால் இந்த விபத்திற்கு அவர் தான் காரணம் என்றால் அவரும் ஒரு காரணமாகும். தெற்கிலிருந்து வடக்குநோக்கி சைக்கிளை ஓட்டி வந்த நபர் எதிர்திசையில் சைக்கிளை உருட்டி வந்த காரணத்தினால் விபத்து ஏற்பட்டுள்ளது என்பதால் இறந்துபோனவரும் விபத்திற்கு ஒரு காரணம் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.